# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண். 6/2022–2023

**2022–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30–ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு காஞ்சிபுரம் மாமன்றத்தின் சாதாரணக் கூட்டம் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி கலந்து ஆலோசித்து முடிவு செய்ய காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மாளிகையில் கூடும்.**

**அவ்வமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**முன்னிலை**
**திருமதி.மூ. மகாலட்சுமி, பி.இ. எம்.பி.ஏ.,**
**மாமன்ற மேயர்**

**1.** ஆணையர் அவர்களின் ஜூலை–2022 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.165/2021/சி1)

**தீர்மான எண். 360 பதிவு செய்யப்பட்டது.**

**2.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் ஜூலை –2022 ஆம் மாத பிறப்பு, இறப்பு பதிவு செய்த விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிறப்பு | 97 | 82 | – | 179 |
| இறப்பு | 65 | 41 | 1 | 107 |

**அலுவலகக் குறிப்பு**
மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3675/2022/எச்3)

**தீர்மான எண். 361 பதிவு செய்யப்பட்டது**

**3.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் எண்.24, மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தினசரி சாலையோர தற்காலிக கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை 2018–19 முதல் 2020–21 வரை குத்தகை விடப்பட்டுள்ளது.

குத்தகைதாரர் திருமதி.S. நந்திதா அவர்கள் குத்தகை நடத்திவந்த நிலையில் கொரோனா நோய் தொற்று பாதிப்பு முழு ஊரடங்கு அமல்படுத்திய காலத்தில் சாலையோர கடைகள் அமைக்காததால் குத்தகை உரிமையினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.04.2021 முதல் 31.10.2021 வரை) நீட்டிப்பு செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள்

(WP No.1343/2021, WP No.1846/2021) தொடுக்கப்பட்டு மறு ஏலம் / குத்தகை விட தடையாணை பிறப்பிக்கப்பட்டதால் குத்தகைக்கு விடப்படவில்லை.

மேலும், இம்மாநகராட்சி உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.S. சீனிவாசன் அவர்களின் சட்டக்கருத்துருவின்படி 01.04.2021 முதல் மறு ஏலம் கோரி குத்தகை ஒப்படைக்கும் வரை துறை மூலம் வசூல் செய்ய சட்டக் கருத்துரு வழங்கியதின்பேரில் நாளது வரை துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து மேற்படி இரண்டு வழக்குகளும் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசரால் 01.02.2022 அன்று மாமநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இக்குத்தகை இனத்தினை 2022–23 முதல் 2024–25 ஆண்டு வரையான மூன்றாண்டுகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மாநகரட்சி வருவாயின் முக்கியத்துவம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 362 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**4.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட கங்கை கொண்டான் நீரூந்து நிலையத்திலிருந்து 30 HP மின் மோட்டார்கள் மூலம் பெரிய காஞ்சிபுரம் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. இவற்றின் மோட்டார் பம்பு மற்றும் ஸ்டாடர்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகின்றது. இவைகள் பொருத்தப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது. மேயர் அவர்களின் நேரடி ஆய்வில் இவற்றை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே முதற்கட்டமாக யூனிட் – II மோட்டார் மற்றும் ஸ்டாடர் 40 HP (Horizontal Squirrel Cage Induction Motor and ATS Starter) ஆக புதுப்பிக்க வேண்டியுள்ளது மேலும் இவற்றின் பம்புகள் ஸ்டாடர் மற்றும் வால்வுகள் பழுது நீக்கம் செய்து சர்வீஸ் பணிகள் மேற்கொண்டு பொருத்தி இயக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சம் ஆகும்.

குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்படி பணிக்கும், செலவீனத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2962/2022/இ3)

**தீர்மான எண். 363 அனுமதி அளிக்கப்பட்டது.**

**5.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022–2023 ன் கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள 11.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் திட்ட மதிப்பீட்டில் |
|---|---|---|---|---|
| 1 | புதிய மாநகராட்சி அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்குதல் பணி | 20.00 | M/s. M.S.Associates, Coimbatore | 1.70% |
| | | | M/s. J.S.Associates, Coimbatore | 2.00% |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. M.S.Associates, Coimbator என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 364 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**6.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் அலுவலக நிர்வாக நடைமுறைப் பணிகளின் போது எதிர்பாரதவிதமாக ஏற்படக்கூடிய செலவினங்களை (சில்லறை செலவினங்கள்) எதிர்கொள்ள வேண்டி உள்ளதால் இவ்வலுவலக பொதுப் பிரிவிற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.5000/– வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1900/2022/பி6)

**தீர்மான எண். 365 அனுமதி அளிக்கப்பட்டது.**

**7.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 22.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | புதுப்பாளையம் ஆரம்ப பள்ளியில் காலை சிற்றுண்டிக்கான பொது சமையலறை அமைக்கும் பணி. | 5.00 | V. Parthipan | – | 0.09% |
| | | | M. Ravishankar | 0.75% | – |

**அலுவலக குறிப்பு** :–

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 366 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**8.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 2022–2023 ன் கீழ் மஞ்சள் நீர்க்கால்வாயினை மேம்படுத்தும் பணியினை ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் நியமனம் தொடர்பாக 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நிறுவனத்தின் பெயர் M/s | ஒப்பந்த சதவீதம் திட்ட மதிப்பீட்டில் |
|---|---|---|---|
| 1 | மஞ்சள் நீர்க்கால்வாயினை மேம்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்குதல் பணி | M/s. Terra Amata Design Consortium, Chennai | 1.50% |
| | | M/s. M.Square Architects, Chennai | 1.75% |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Terra Amata Design Consortium, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 367 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**9.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 11.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 15.08.2022 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு அறிஞர் அண்ணா திடலின் நான்கு இடங்களில் தற்காலிக கழிப்பிடங்கள் (Mobile Toilet) அமைத்தல் பணி. | 0.236 | M/S S.K.SANITAZ CHENNAI | – | 1.00% |
| | | | M/S LEO POLYMERS ENTERPRISES CHENNAI | 11.00% | - |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. S.K.SANITAZ, CHENNAI என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 368 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**10.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 08.08.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனம் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாநகராட்சி அலுவலகத்தில் 15.08.2022 அன்று நடைபெறவுள்ள 75–வது சுதந்திர தின விழாவிற்கு தேவையான அலங்கார மின் விளக்குகள், மேடை, பந்தல், சேர், மேசை, தோரணம், ஒலிபெருக்கி ஆகியவை அமைத்தல் பணி | M/s. மகேந்திரன் சப்ளையர்ஸ் & டெக்ரேடர்ஸ் | 33000/– |
| | | M/s. சக்தி ஸ்ரீ யோகலட்சுமி டெக்கரேட்டர்ஸ் & சப்ளையர்ஸ் | 34500/– |
| | | M/s. அருணா சப்யைர்ளஸ் | 37000/– |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. மகேந்திரன் சப்ளையர்ஸ் & டெக்ரேடர்ஸ், என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 369 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**11.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் Swachh Bharat Mission (Urban) 2.0 – 2021–22 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 27.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தில் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | **பொது கழிப்பிடம்** | | | | |
| 1 | கைலாசாநாதம் கோயில் தெருவில் பொது கழிப்பிடம் அமைத்தல். | 36.28 | G. Lakshmi | – | 0.03% |
| | | | V. Pugalenthi | 0.34% | – |
| | **சமுதாய கழிப்பிடம்** | | | | |
| 1 | அன்னை சத்யா நகர் பகுதியில் சமுதாய | 24.96 | G. Hari Dass | – | 0.70% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கழிப்பிடம் அமைத்தல் | | M/S. RMD Construction | 1.59% | – |
| 2 | திருவீதிபள்ளம் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல் | 24.96 | K. Sudarmani | – | 0.05% |
| | | | K. Ranganathan | 0.76% | – |
| 3 | நகராட்சி பகுதிகளில் 10 இடங்களில் Urinal அமைத்திடும் பணி. | 19.20 | V.Pugalendhi | – | 0.03% |
| | | | G.Lakshmi | 0.90% | – |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3222/2022/இ1)

**தீர்மான எண். 370 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**12.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி மார்க்கெட் கட்டிடத்தினை இடித்து புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு தமிழக அரசால் ரூ.700.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளதை, புதியதாக கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது.

எனவே, மார்க்கெட் கட்டிடங்களை இடித்து, புதிய கட்டிடம் கட்ட வேண்டி, இப்பகுதியில் உள்ள மின் இணைப்புகளை தற்காலிகமாக துண்டிக்க வேண்டியுள்ளது. அதற்காக தமிழக மின் வாரியத்திற்கு மின் இணைப்பு துண்டிப்பு கட்டணமாக ரூ.3,68,242/– தொகையினை கேட்பு பெறப்பட்டு உள்ளது. அவசர அவசியம் கருதி மின் இணைப்பு துண்டிப்பு கட்டணம் ரூ.3,68,242/– மின் வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, மாமன்ற மேயர் அவர்களின் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.337/2021/இ2)

**தீர்மான எண். 371 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**13.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டு பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகள், சாலையோரமாகவும், சாலையின் இடையேயும் நின்ற வண்ணம் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும், வெளியூர்களிலிருந்து வழிபாட்டு தலங்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கும் இடையூராகவும், உயிர் உடைமைக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிப்பதற்கு மூக்கனாங்கயிர் இல்லாத நிலையில் அதனை பிடித்து மாநகராட்சி பணியாளர்களால் அப்புறப்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே சாலையில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து மாநகராட்சி கூறும் இடத்தில் சேர்க்க ஒரு நபர் ஒரு மாடு பிடிப்பதற்கு ரூ.300/– வீதம் சுமார் 300 மாடுகள் பிடிக்க ஆகும் தோராய செலவுத் தொகை ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.63300/2022/எச்1)

**தீர்மான எண். 372 அனுமதி அளிக்கப்பட்டது**

**14.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மாநகரப்பகுதிகளில் தினந்தோறும் திடக்கழிவுகள் உருவாகின்றன. இக்கழிவுகளை வீடு வீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக தரம் பிரிக்கப்பட்டு மக்கும் கழிவுகளை உரக்குடில்களில் உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்காத கழிவுகளை மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றது. இப்பணிகளை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ள BOV வாகனங்கள் கோட்டம் வாரியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி BOV வாகனங்கள் தற்போது பேட்டரி மற்றும் சிறு இயந்திர பழுதுகள் போன்ற கோளாறுகள் காரணமாக வாகனங்கள் இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேற்படி BOV வாகனங்களின் பயன்பாடு அவசியம் என்பதால் மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய தொகை | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | BOV வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பேட்டரி மாற்றுதல் (கோட்டம் IV –2, கோட்டம் V – 2 கோட்டம் VI – 2. செவிலிமேடு –2) | 4.50 இலட்சம் | ஸ்ரீ சுவாமி எலக்ட்ரானிக்ஸ். சென்னை |
| 2. | BOV வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பேட்டரி மாற்றுதல் (கோட்டம் I –3, கோட்டம் II – 2 கோட்டம் III – 3) | 5.10 இலட்சம் | ஸ்ரீ சுவாமி எலக்ட்ரானிக்ஸ். சென்னை |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2935/2021/எச்1)

**தீர்மான எண். 373 பதிவு செய்யப்பட்டது.**

**15.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான உத்திரமேரூர் வழிதட பேரூந்துகள் நிற்கும் இடத்தின் தென் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் (Community Toilet) பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளதால், மேற்படி கழிப்பிடத்தை அப்புறப்படுத்தி அவ்விடத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு RRC (வளமீட்பு மையம்) கட்டிடம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.288/2013/அ1)

**தீர்மான எண். 374 அனுமதி அளிக்கப்பட்டது**

**16.** இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரை உள்ள பகுதிகளில் கோவில் இடத்தில் மற்றும் (Trust) டிரெஸ்ட் இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு கோவில் மற்றும் டிரெஸ்ட் பெயரில் காலிமனை வரி மற்றும் சொத்துவரி விதிப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.288/2013/அ1)

**தீர்மான எண். 375 அனுமதி அளிக்கப்பட்டது**

**17.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள ஓட்டல் சக்திபவன் மாடியில் குத்தகை இனம் எண்.22 மாநகராட்சி தங்கும் விடுதி செயல்பட்டு வந்தது. இதில் அத்திவரதர் வைபவத்திற்காக பிற மாநகராட்சி, நகராட்சியிலிருந்து மாற்று பணியில் வந்த பணியாளர்கள் தங்கவைக்கப்பட்டனர்.

அதன் பிறகு மேற்படி தங்கும் விடுதி பயன்பாடு இல்லாமல் சிதலமடைந்துள்ளது. தற்போது இம்மாநகராட்சி வருவாய் ஈட்டுவதற்கு ஏதுவாக மேற்படி குத்தகை இனத்தினை அலுவலக அல்லது வணிக பயன்பாட்டிற்கு ஏற்றவாறு (எல்.ஐ.சி, வங்கி மற்றும் ஓட்டல்) தங்கும் விடுதியின் அறைகளின் தடுப்புசுவர்களை அகற்றி மாற்றம் செய்து குத்தகை அல்லது பொது ஏலம் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.288/2013/அ1)

**தீர்மான எண். 376 அனுமதி அளிக்கப்பட்டது**

**18.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் எண்.12, இரயில்வே ரோட்டில் உள்ள இராஜாஜி நகராட்சி சந்தைக்கு அருகில் உள்ள பொது கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்க 2020–21 முதல் 2023–24ம் ஆண்டு வரை குத்தகைக்கு 11.02.2021 ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரப்பட்டதில் திரு.K.குப்பன் என்பவர் உச்ச ஏலத்தொகை கோரி குத்தகை எடுத்துள்ளார்.

தற்போது இராஜாஜி நகராட்சி சந்தையின் பழைய கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால், மேற்படி குத்தகைதாரர் 2022–23 ஆம் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டிற்கான குத்தகை உரிமத்தினை ரத்து செய்யுமாறு கோரி குத்தகைதாரர் திரு.K. குப்பன் குத்தகை இனத்தின் சாவியினை 01.08.2022 அன்று அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

எனவே, மேற்படி குத்தகை உரிமையினை ரத்து செய்து மறு ஏலம் கோரவும், அன்னார் செலுத்தியுள்ள வைப்புத் தொகையில் அன்னார் குத்தகை அனுபவித்த காலத்திற்கு 01.04.2022 முதல் 31.07.2022 வரை மற்றும் ஏலம் கோரி புதிய குத்தகைதாரருக்கு குத்தகையினை ஒப்படைக்கும் காலம் வரை ஈடு செய்து மீதமுள்ள தொகையினை குத்தகைதாரருக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மாநகராட்சி வருவாயின் முக்கியத்துவம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை ரத்து செய்து, மறு ஏலம் கோர அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.288/2013/அ1)

**தீர்மான எண். 377 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**19.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, பிறப்பு, இறப்பு பதிவுகள் சட்டம் காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டு பகுதிகளில் நிகழும் பிறப்பு, இறப்பு பதிவுகள் காஞ்சிபுரம் மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பதிவு செய்யப்படும் நிகழ்வுகளின் பிறப்பு அல்லது இறப்பின் சான்றிதழ்களை பெறுவதற்கு தற்போது பொது மக்கள் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து செல்கின்றனர். இதனால் தேவையற்ற கால விரயம், பொருள் விரயம் நேரிடுகின்றன. எனவே இதனை தவிர்க்கும் வகையில், பிறப்பு அல்லது இறப்பு சான்று பெறுவதற்கு மனுதாரர்கள் சான்றிதழ் விண்ணப்பிக்கும் போது சான்றிதழ்களை தபால் மூலம் பெறுவதற்கு ரூ.30/- கூடுதலாக பெற்றுக்கொள்ளவும், சான்றுகளை தபால் மூலம் அனுப்பவும் நடடிவக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.6453/2022/எச்3)

**தீர்மான எண். 378 அனுமதி அளிக்கப்பட்டது**

**20.** காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியில் ரெட்டிப்பேட்டை, வெங்கடேஸ்வரா நகர், குமரன் நகர், காமாட்சி நகர் குடியிருப்பு பகுதிகளில் பன்றிகள் வளர்ப்பதாகவும், இதனால் பொது சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களிலும், சாலைகளிலும் பொதுமக்களுக்கு இடையூராகவும் மற்றும் போக்குவரத்து விபத்து ஏற்படுத்தும் வகையில் பராறியாய் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து தங்கள் சொந்த பொருட்செலவில் அப்புறப்படுத்துவதற்கு All India PIG & DOG Catchers திருமங்கலம் என்ற நிறுவனத்தால் அளிக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் இம்மாநகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கு பணி உத்தரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.5207/2020/எச்1)

**தீர்மான எண். 379 அனுமதி அளிக்கப்பட்டது**

**21.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிய மாநகராட்சி அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானிய கோரிக்கை எண். 34, அறிவிப்புகள் 2022-23 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே புதிய மாநகராட்சி அலுவலகம் கட்டுவது குறித்து, காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு 01.07.2022 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நேரடி ஆய்வின் போது வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி உத்தேச மதிப்பீடு தொகை ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி அலுவலகம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு தனியார் ஆலோசகர் நியமனம் செய்ய வேண்டி உள்ளது. அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 1001 /2022/இ1)

**தீர்மான எண். 380 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**22.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் – திருப்பாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயக்கத்திலிருந்த 60 HP வெர்டிகல் டர்பைன் பம்புசெட் யூனிட் III 19.07.2022 அன்று Grip காரணமாக Load (Discharge) எடுக்கவில்லை. சோதனை செய்ததில் பம்பு சாப்ட் கட்டாகி இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தொடர் இயக்கத்தினால் அதிர்வுகள் ஏற்பட்டு தேய்மானம் அடைந்துள்ளது. இவை பொருத்தப்பட்டு பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது.

டர்பைன் பம்பின் காளம் பைப் 200 mm dia டபுள் ப்ளான்ஞ், 11 எண்கள், லைன் சாப்ட், டர்பைன் பம்பு, பவுல் அசெம்ளி, டிஸ்சார்ஜ் கேசிங் இவற்றை 20 மீட்டர் ஆழம் உள்ள கலெக்டார் கிணற்றில் இருந்து கழற்ற வேண்டும்.

பம்பு சாப்ட், SS சிலிவிஸ், காளம் பைப், ஸ்பைடர் புஸ், பம்பு கன்மெட்டல் புஸ், பம்பு அசெம்ளி, போல்ட், நட் மற்றும் வாசர் இவற்றை புதுப்பித்தும் மற்றும் சர்வீஸ் செய்து பெயிண்ட் செய்து பின் அனைத்தையும் பொருத்தி இயக்க வேண்டியுள்ளது.

மேலும் பம்பு பேஸ் முற்றிலும் பழுதடைந்துள்ளது. இதன் பேஸ் பேப்ரிகேசன் பணிகள் செய்து, பெயின்டிங் செய்து மோட்டார் பம்பு பொருத்தி மோட்டார் இயக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.3.70 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 381 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**23.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 ல் அமைந்துள்ள முல்லை நகர், எல்லப்பா நகர், வேதாசல நகர் பகுதிகளில் மழைக்காலங்களில் வெள்ள நீர் புகுந்து அனைத்து குடியிருப்புதாரர்களுக்கும் மிகுந்த பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி, எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு, மேற்படி தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டி உள்ளதால், உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.75 இலட்சத்திற்கு மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 382 அனுமதி அளிக்கப்பட்டது.**

**24.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ல் அமைந்துள்ள S.V.N பிள்ளைத் தெரு சந்தில் பழுது அடைந்த பகுதிகளை சீர் செய்து தருமாறு இப்பகுதி பொது மக்கள் கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட சாலையில் கான்கிரீட் பழுதுகளை சரி செய்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.50,000/– மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 383 அனுமதி அளிக்கப்பட்டது.**

**25.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருவதால் டெங்கு கொசுக்களை அழிக்கப் பணியின் அவசர அவசியம் கருதி பட்டியலில் கண்டுள்ள பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ் குறிப்பிட்டுள்ள இப்பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | விநியோகம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | இம்மாநகராட்சி முழுவதும் கொசு மருந்து தெளிக்க (Pyrethrum Extract) 2 % 200 lirer | 2.50 இலட்சம் | Tamilnadu Medical Service Corporation Ltd., Hindustan Insecticide Supply, Chennai. |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.5767/2022/எச்1)

**தீர்மான எண். 384 பதிவு செய்யப்பட்டது.**

**26.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருவதால் டெங்கு கொசுக்களை அழிக்கப் பணியின் அவசர அவசியம் கருதி பட்டியலில் கண்டுள்ள பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ் குறிப்பிட்டுள்ள இப்பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | விநியோகம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | புகை மருந்து தெளிப்பு பணிக்கு எரிப்பொருளாக பயன்படுத்தப்படும் LPG Cylinder (Aerosal Can) 500 எண்ணிக்கை | 1.50 இலட்சம் | Prime Agencies |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.5767/2022/எச்1)

**தீர்மான எண். 385 பதிவு செய்யப்பட்டது.**

**27.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு 1 முதல் 51 வரையிலான பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக பணிகளை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களை மாமன்ற தீர்மான எண். 284, நாள். 30.06.2022 ன்படி முடிவடைகிறது. மேலும் பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டம் கொரோனா நோய் தொற்று, டெங்கு காய்ச்சல் முதலிய பணிகளின் அவசர அவசியம் கருதி மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்போது 80 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களது 2021–2022 ஆம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.370/– வழங்கவும், ஜீலை 01,2022 முதல் 89 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.28.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் சொந்த வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 5220/2016/எச்1)

**தீர்மான எண். 386 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**28.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டு பகுதியில் உள்ள வீடுகள் தோறும் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கப்பட்டு நத்தப்பேட்டை மற்றும் செவிலிமேடு பகுதியில் இயங்கிவரும் மாநகராட்சி உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றது. தற்போது Bio Mining வேலை நடைபெற்று வருகின்றது. மக்கும் குப்பையை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு உரமாக்க பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மக்கும் குப்பையை தனியாகவும் மக்காத குப்பையுடனும் ஒருமுறையே பயன்படுத்தும் மக்கா குப்பையான பிளாஸ்டிக் (மைக்கா) பேப்பர்கள் வருகின்றது. அவற்றை சேமிக்க போதுமான தனியிடம் இல்லாத காரணத்தாலும் BOV வாகனத்தின் பக்கவாட்டம் மாட்டிக் கொள்ளவும், மக்காத பொருட்கள் தனியாக பிரித்து போராபைகள் சேர்க்க வேண்டியுள்ளதால் அனைத்து வார்டுகளுக்கும் திடக்கழிவு சேகரிப்பு பணிக்காக போரா பைகள் தேவைப்பட்டுள்ளது. இவற்றை தகுதியுள்ள அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரப்பட்டு அவற்றுக்கு ஏற்படும் செலவினத்திற்கு தோராயமாக ரூ. 3.00 இலட்சம் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.7217/2022/எச்1)

**தீர்மான எண். 387 அனுமதி அளிக்கப்பட்டது.**

**29.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஆசாதிகா அம்ரித் மஹோத்சஸ் (AKAM) அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி திட்டத்தின் கீழ் 75 வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழா கொண்டாடுவதை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒரு மண்டலத்திற்கு ஒரு ஆட்டோ வீதம் 4 மண்டலங்களுக்கு 4 ஆட்டோக்கள் மூலம் 10.08.2022 முதல் 14.08.2022 வரை 5 நாட்களுக்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ததற்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | விநியோகம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | ஆசாதிகா அம்ரித் மஹோத்சஸ் (AKAM) அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி – பொது மக்களுக்கு விளம்பர விழிப்புணர்வு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்தல். | 60,000/- | திரு. P. பன்னீர்செல்வம், திருக்காலிமேடு, காஞ்சிபுரம். |

**அலுவலகக் குறிப்பு** :-

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.7301/2022/எச்1)

**தீர்மான எண். 388 பதிவு செய்யப்பட்டது.**

**30.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து தடுப்பூசி செலுத்தவும், நாய்களுக்கு 3 தினங்களுக்கு உணவு வழங்கிடவும் அறுவை சிகிச்சைக்கு பிறகு பராமரிப்பு செய்து சிகிச்சை செய்யப்பட்ட நாய்களை மீண்டும் பிடித்த இடத்திலே கொண்டு போய் விடவும், விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ. எண் | பணியின் விவரம் | நிறுவனத்தின் விவரம் | நாய் ஒன்றுக்கு சிகிச்சைக்கான மொத்த செலவின தொகை |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து இனப்பெருக்கம் அறுவை சிகிச்சை செய்யும் பணிகள். | VOICE FOR ANIMALS (CHENNAI) CHARITABLE TRUST | ரூ.700 /- |
| 2. | | HANDS FOR ANIMALS NO. 71, Third Street, Ambedkar Nagar, Sirungavur, Chennai-600 058. | ரூ.725 /- |
| 3. | | HEART TO HEART VET FOUNDATION | ரூ. 750/- |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள VOICE FOR ANIMALS (CHENNAI) CHARITABLE TRUST என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 11291/2019/எச்1)

**தீர்மான எண். 389 அனுமதி அளிக்கப்பட்டது.**

**31.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் இராஜாஜி மார்கெட் பழுதடைந்ததால் மேற்கண்ட மார்கெட்டினை புதியதாக அமைக்க ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி துவங்கும் நிலையில் உள்ளதால் வியாபாரிகளுக்கு தற்காலிகமாக ஓரிக்கை பகுதி பணிமனை எதிரில் ஏற்கனவே கொரோனா பாதிப்பு ஏற்பட்டநிலையில் அமைக்கப்பட்ட கடைகளுக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியில் 150 க்கும் மேற்பட்ட கடைகள் தற்காலிகமாக அமைக்கப்படவுள்ளதால் அங்குள்ள வியாபாரிகளுக்கு கழிவறை மற்றும் அடிப்படை வசதிகள் செய்து வழங்குவது அவசியமாகிறது. இப்பகுதியில் ஏற்கனவே உள்ள கழிவறையில் ஒரு பகுதி SSS 2019-20 திட்டத்தில் செய்து முடிக்கப்பட்டு உள்ளது. மீதப் பகுதியை சீர் செய்து கழிவறை மற்றும் குளியலறை அமைக்கவும் அதற்கான குடிநீர், பைப்லைன், மின் வசதி, மின் அறை, செப்டிக் டேங்க், வெதரிங் கோர்ஸ் ஓடு பதித்தல் மற்றும் போர்வெல் மோட்டார் பைப் லைன் முதலியவை அமைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.65 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 390 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**32.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 17.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | பஞ்சுப்பேட்டையில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி. | 1.50 | M/s.Syscon Systems | – | 0.41% |
| | | | M/s.Sri Hyagriva Computers, Chennai | 8.03% | - |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 391 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**33.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 17.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் உத்திரமேரூர் வழித்தடத்தில் இயக்கும் இடத்தினை சுற்றி தடுப்பு சுவர் மற்றும் கேட் அமைக்கும் பணி | 1.20 | M/s.V.P.Works Contractor, Kancheepuram | – | 0.21% |
| | | | G.Haridass | 1.76% | - |
| 2 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் சேக்குப்பேட்டை பகுதி வழியாக வரும் பயணிகள் செல்லும் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 1.50 | Keetha | – | 0.02% |
| | | | G.Haridass | 0.59% | - |

அலுவலக குறிப்பு :

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 392 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**34**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20, ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வைத்ததின் பேரில், மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளருடன் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வெங்கடேசபாளையம், ஐதர்பேட்டை ஜிந்தர் தெரு சந்திப்பு முதல் தும்பவனம் தெரு வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் | 2.00 |
| 2 | காந்தி சாலை ஆரம்பப்பள்ளியில் பெண்களுக்கான கழிப்பிட வசதி மற்றும் சுற்றுச்சுவரின் உயர்த்தி அமைத்தல் | 3.00 |
| 3 | விஜயகிராமணி தெரு, தும்பவன அருணாச்சலம் தெரு, இராஜாஜி மார்கெட் சாலை மற்றும் ஐதர்பேட்டை ஜிந்தர் தெருவில் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை செப்பணிட | 1.50 |

**அலுவலக குறிப்பு** :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 393 அனுமதி அளிக்கப்பட்டது.**

**35**. காஞ்சிபுரம் மாநகராட்சியில் திருபாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து தினமும் 8.00 MLD வீதம் குடிநீர் நேரு மார்கெட், உப்பேரிகுளம், மண்டபம் தெரு, யதோத்தகாரி, பட்டாளம் தெரு, விளக்கடி கோயில் தெரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் G.K மண்டபம் நீரூந்து நிலயைத்திறக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. நீரூந்து நிலையத்தில் குளோரினேசன் பிளான்ட் மூலமாக சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கலந்து பாதுகாப்பான குடிநீர் நகரில் வழங்கப்பட்டு வருகின்றது.

லிக்விட் குளோரின் விநியோகம் ஜீலை மாதத்துடன் முடிவடைந்த நிலையில், மழைக்காலம் வருவதை தொடர்ந்தும், தொய்வின்றி குளோரின் சப்ளை மற்றும் இணைந்த மோட்டார் பம்பு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ள வேண்டியுள்ளதால் வரும் எட்டு மாதங்களுக்கு சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் மற்றும் இணைந்த மோட்டார் பம்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 394 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் தாயார்குளம் டுகூ (டுடிற கூநளேடிn) பம்பிங் ஸ்டேசனில் இருந்து கழிவுநீர் மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் அனுப்பப்படுகின்றது.

இதில் உள்ள கழிவுநீர் மோட்டார் பம்பு – ஐ 30 ழுஞ (சூடிn ஊடடிப னுசல ஆடிவடிச ளுரbஅநசளiடெந ஞரஅயீளநவ) 2012 முதல் இயக்கத்தில் இருந்து வருகின்றது. 02.08.2022 அன்று இயக்கத்தின் போது ளுhடிசவ ஊசைஉரவை காரணமாக டீஎநச டுடியன ஆகி மோட்டார் காயில் எரிந்து விட்டது. மேலும் ஆயில் சில், பம்பு இவைகள் தொடர் இயக்கத்தினால் தேய்மானம் அடைந்து பழுது ஏற்பட்டுள்ளது மற்றும் அதன் ளுவயச – னுநடவய ளுவயசவநச ன் டீடுசு ஊடினேரஉவ மற்றும் ழுசுஊ குரளந புதுப்பித்து சர்வீஸ் செய்து இயக்க வேண்டியுள்ளது.

மேலும் கழிவுநீர் மோட்டாரை ஏற்றி, இறங்கும் ழுரனைந ஞipந முற்றிலும் சிதைவடைந்துள்ளது. எனவே மோட்டார் பம்பு, ஸ்டாடர், ழுரனைந ஞipந இவற்றின் பழுதுகள் சரிசெய்தும், புதுப்பித்தும் இயக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.2.30 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**36**. காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் தாயார்குளம் LT (Low Tension) பம்பிங் ஸ்டேசனில் இருந்து கழிவுநீர் மோட்டார்கள் மூலம் நீரேற்றும் செய்யப்பட்டு சுத்தகரிப்பு நிலையம் அனுப்பப்படுகின்றது.

இதில் உள்ள கழிவுநீர் மோட்டார் பம்பு I–30 HP (Non Clog Dry Motor Submersible Pumpset) 2012 முதல் இயக்கத்தில் இருந்து வருகின்றது. 02.08.2022 அன்று இயக்கத்தின் போது Short Circuit காரணமாக Over Load ஆகி மோட்டார் காயில் எரிந்து விட்டது. மேலும் ஆயில் சில், பம்பு இவைகள் தொடர் இயக்கத்தினால் தேய்மானம் அடைந்து பழுது ஏற்பட்டுள்ளது மற்றும் அதன் Star – Delta Starter ;ன் OLR Conduct மற்றும் HRC Fuse புதுப்பித்து சர்வீஸ் செய்து இயக்க வேண்டியுள்ளது.

மேலும் கழிவுநீர் மோட்டாரை ஏற்றி, இறங்கும் Guide Pipe முற்றிலும் சிதைவடைந்துள்ளது. எனவே மோட்டார் பம்பு, ஸ்டாடர், Gide Pipe இவற்றின் பழுதுகள் சரிசெய்தும், புதுப்பிதும் இயக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.2.30 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 395 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**37**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23–ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வைத்ததின்பேரில், மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளருடன் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | யதோத்தகாரி மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவரில் சேதமடைந்த பகுதியினை சரிசெய்தல் | 1.50 |
| 2 | நேதாஜி நகர், மாகாளியம்மன் கோயில், வரதராஜபுரம் பகுதியில் சேதமடைந்த சாலையினை தார் பேட்ச் கொண்டு செப்பனிடுதல் | 1.50 |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 396 அனுமதி அளிக்கப்பட்டது.**

**38**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வைத்ததின் பேரில், மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளருடன் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நத்தப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தினை பழுதுபார்த்து பராமரித்தல் | 3.00 |
| 2 | நத்தப்பேட்டை நடுத்தெரு, மேட்டுத்தெரு மற்றும் பள்ள தெருவிற்கு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 14.00 |
| 3 | நத்தப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியினை சுற்றி சுற்று சுவர் அமைத்தல் | 10.00 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 397 அனுமதி அளிக்கப்பட்டது.**

**39**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 1933 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இராஜாஜி மார்கெட் கட்டிடத்தினை அகற்றி புதியதாக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதியதாக சந்தை அமைத்திட ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. புதிய கட்டிடம் அமைக்க ஏதுவாக பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த வேண்டி உள்ளதால், பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோர மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 398 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**40.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, ல் சேஷாத்திரி பாளையம் பழனி தெருவில் பச்சையப்பன் இடைநிலைப்பள்ளி அருகில் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பொது கழிப்பிடம் பயன்பாடு இன்றி சேதமடைந்துள்ளதாகவும் அவற்றினை அகற்றி தருமாறு அப்பகுதி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில், மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளருடன் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் அறிவுரையின் படி மேற்படி கழிப்பிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், இப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் கழிப்பிட வசதி உள்ளதாலும், இக்கழிப்பிடத்தினை பொதுமக்கள் பயன்படுத்தாத காரணத்தினால் இவற்றினை இடித்து அப்புறப்படுத்திட பொது ஏலம் கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 399 அனுமதி அளிக்கப்பட்டது.**

**41.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42, செவிலிமேடு நகர்புற மருத்துவமனையில் உள்ள பழுதடைந்துள்ள மேல்நிலைத் தொட்டி அகற்ற வேண்டி உள்ளது. எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு, பொதுமக்களின் நலன் கருதியும், பழுதடைந்த மேல்நிலைத் தொட்டியினை அகற்றி தருமாறு மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். எனவே மேற்காணும் பணியினை செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.75,000/–க்கு க்கு மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 400 அனுமதி அளிக்கப்பட்டது.**

**42.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 ல் கீழ்கண்ட பணிகளை செய்து கொடுக்குமாறு மாமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதின் பேரில், பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதுபெரியார் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 3.30 |
| 2 | என்.எஸ்.கே. நகர் பகுதியில் மழைநீர் காலவாய் அமைத்தல். | 7.90 |
| 3 | திருவள்ளுவர் சாலைக்கு மழைநீர் கால்வாய் அமைத்தல். | 7.80 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 401 அனுமதி அளிக்கப்பட்டது.**

**43.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31, ல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததின் பேரில், மேற்படி இடத்தினை நகராட்சி பொறியாளருடன் நேரடி ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் அறிவுரையின் படி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நாகலூத்து மேடு அரசமர தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தினை பழுதுபார்த்து பராமரித்தல் | 1.50 |
| 2 | நாகலூத்து மேடு அரசமர தெருவில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி செய்தல். | 2.00 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 402 அனுமதி அளிக்கப்பட்டது.**

**44.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2022–23 தூய்மை இந்தியா திட்டம் (Swach Bharat Mission) 2.O திட்டத்தின் கீழ் சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களது ந. க. 18856/2022/ தூய்மை இந்தியா திட்டம் 2.O நாள்.13.07.2022 கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே கீழ்க்காணும் விவரப்படி கழிப்பிடங்கள் கட்ட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.21, அருந்ததியர் குடியிருப்பு பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் (Type – II) | 19.28 |
| 2 | வார்டு எண்.28, துப்புரவு பணியாளர் குடியிருப்பு பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல். | 31.28 |

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.6755/2022/இ1)

**தீர்மான எண். 403 அனுமதி அளிக்கப்பட்டது.**

**45.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் ஆணையாளர், பொறியாளர், நகரமைப்பு அலுவலர், நகர் நல அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகிய துறை அலுவலர்கள் காணொளி வழியாக (Video Conference) நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ள ஏதுவாக 4 எண்ணிக்கை Tabs – 4 எண்கள் GEM Portal மூலமாக வாங்கி வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 404 அனுமதி அளிக்கப்பட்டது**

**46.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கு தேவையான Mother Board, Monitor, Antivirus Software, Mouse, Key Board, UPS மற்றும் வரி வசூல் பிரிவிற்கு புதியதாக ஒரு Dot Matrix Printer கொள்முதல் செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.7216/2022/இ1)**

**தீர்மான எண். 405 அனுமதி அளிக்கப்பட்டது**

**47.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் தட்டச்சு பிரிவில் பயன்பாட்டில் இருந்துவரும் Cannon Xerox Machine கொள்முதல் செய்யப்பட்டு எட்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு சரிசெய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனால் அலுவலக கோப்புகள் உரிய நேரத்தில் பிரிண்ட் எடுக்க இயலாத நிலை உள்ளது. எனவே தட்டச்சு பிரிவிற்கு ஒரு Xerox Machine–ம், பொறியியல் பிரிவிற்கு ஒரு Xerox Machine–ம், மேலும் Double side Printer இரண்டும் புதியதாக புதியதாக வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.7216/2022/இ1)**

**தீர்மான எண். 406 அனுமதி அளிக்கப்பட்டது**

**48.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் எண்.3 இராஜாஜி நகராட்சி மீன், ஆட்டு இறைச்சி, சந்தையில் கட்டணம் வசூலிக்கும் மூன்றாண்டு உரிமம் ( 2020–2021 முதல் 2022–2023 வரை) குத்தகைதாரர் திரு.எஸ்.முகமது அகில்சுப்பையர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 மூன்றாம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.1,88,528/– செலுத்தக்கோரி எஸ். முகமது அகில் சுப்பையர், நெ.14/1, மளிகை தெரு, அவர்களுக்கு பல முறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் மாநகராட்சி வருவாய் அலுவலர், மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்கள் மூலம் நேரில் தெரிவித்தும். இதுநாள்வரை குத்தகை தொகை செலுத்தாமல் இருந்துவருகிறார்.

எனவே 2020–2021 –2022–2023 வரையிலான ஏல அறிக்கையில் பொது நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட விதிகளின்படி மேற்படி குத்தகை உரிமையினை இரத்து செய்து மறு ஏலம் விடவும், அதுவரை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. இவ்வினத்திற்கு குத்தகைதாரர் செலுத்தியுள்ள முன்வைப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை ஆகியவற்றினை பறிமுதல் செய்யவும், குத்தகைததாரர் திரு. எஸ். முகமது அகில்சுப்பையர் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.12443/2019/அ1)

**தீர்மான எண். 407 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**49.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் எண்.6 ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் (சாணம், குப்பை முதலியன உட்பட) மூன்றாண்டு உரிமம் ( 2020–2021 முதல் 2022–2023 வரை) குத்தகைதாரர் திரு.எஸ்.முகமது அகில்சுப்பையர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 மூன்றாம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.1,73,093/– செலுத்தக்கோரி எஸ். முகமது அகில் சுப்பையர், நெ.14/1, மளிகை தெரு, அவர்களுக்கு பல முறை அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் மாநகராட்சி வருவாய் அலுவலர், மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்கள் மூலம் நேரில் தெரிவித்தும். இதுநாள்வரை குத்தகை தொகை செலுத்தாமல் இருந்துவருகிறார்.

எனவே 2020–2021 –2022–2023 வரையிலான ஏல அறிக்கையில் பொது நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட விதிகளின்படி மேற்படி குத்தகை உரிமையினை இரத்து செய்து மறு ஏலம் விடவும், அதுவரை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இவ்வினத்திற்கு குத்தகைதாரர் செலுத்தியுள்ள முன்வைப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை ஆகியவற்றினை பறிமுதல் செய்யவும், குத்தகைததாரர் திரு. எஸ். முகமது அகில்சுப்பையர் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.12443/2019/அ1)

**தீர்மான எண். 408 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**50.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு பேருந்து நிலைய குடிநீர் தேக்கத் தொட்டிக்கு தென் புறமுள்ள காலியிடத்தில் புதியதாக நிறுவப்பட்டுள்ள மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் 2022–23 முதல் 2024–25 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 23.08.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்ரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்தார்கள். வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் எண். | குத்தகை விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை. |
|---|---|---|---|---|
| 1 | 10 | பேருந்து நிலைய குடிநீர் தேக்கத் தொட்டிக்கு தென் புறமுள்ள காலியிடத்தில் புதியதாக நிறுவப்பட்டுள்ள மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | திருமதி. உ. லட்சுமி, எண்.6/4, செட்டிகுளம், பள்ளத்தெரு, காஞ்சிபுரம். | 6,00,000/– |
| | | | திருமதி. பி. லட்சுமி, எண்.17டி, அன்னை இந்திரா காந்தி, சாலை, காஞ்சிபுரம். | 7,91,100/– |

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.லட்சுமி அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.7,91,100/– மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளது. மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. இவ்வினத்திற்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. பி.லட்சுமி அவர்கள் அளித்துள்ள உச்ச ஒப்பந்தப்புள்ளி கடந்த மூன்றாண்டின் குத்தகை தொகையினைவிட கூடுதலாக உள்ளதால் அதனை ஏற்று குத்தகை உரிமை வழங்க மன்றம் அனுமதிக்காலம்.

**தீர்மான எண். 409 அலுவலக குறிப்பு வரிசை எண்.2–ல் தெரிவித்துள்ளவாறு மன்றத்தில் அனுமதி அளிக்கப்பட்டது.**

**51.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் 15வது மான்ய நிதிக்குழு மான்ய நிதிக்குழு தேசிய சுகாதார பணிகள் திட்டம் – 2021ன்கீழ் ஆரம்ப சுகாதார மையம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.32454 / 2021/அம்ரூட்–2 நாள். 17.12.2021ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட விவரப்படி 12.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s |
|---|---|---|---|
| 1 | பிள்ளையார் பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி. | 25.00 | A.Selva Kumar |

மேற்கண்ட பணிக்கு மன்ற தீர்மான எண்.363, நாள்.21.01.2022 ல் ஒப்புதல் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியில் உள்ள பிள்ளையார் பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணிக்கு அப்பகுதியில் போதிய இடவசதி இல்லையாதலால் அப்பணியினை திருக்காளிமேடு பகுதியில் அதே மதிப்பீட்டு விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் திரு.எ. செல்வகுமார் என்பவர் மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணி திட்டப்பணியாதலால் பணியின் அவசியம் கருதி இடமாறுதல் செய்து பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.14745/2021/இ1)

**தீர்மான எண். 410 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**52.** காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம் அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான வார்டு எண்.3 (மாநகராட்சி வார்டு எண்.14) பிளாக் எண்.18–ல் உள்ள நகர புல எண்.1274/1 மற்றும் 1274/2–இல் 5 ஏக்கர் புஞ்சை நிலம் அரசாணை நிலை எண்.223 நகராட்சி (ந.நி.IV) நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 05.12.2009–ன்படி பேரறிஞர் அண்ணா நூற்றாண்டினை ஒட்டி மேற்குறிப்பிட்டுள்ள திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பொது மக்கள் பயன்பாட்டில் பூங்கா அமைத்து பொது மக்கள் பயன்பாட்டில் இருந்துவருகிறது.

இந்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள பூங்கா மற்றும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான மற்றும் பராமரிப்பில் உள்ள அனைத்து பூங்காக்களின் பாதுகாப்பு கருதியும் அங்கு வந்து செல்லும் பொது

**மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டும் இனிவரும் காலங்களில் இப்பூங்காக்களில் சிறுவர்கள் உடன் வரும் பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் மட்டும் அனுமதிக்கப்பட வேண்டி மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :–**

1. **சிறுவர்கள் உடன் வரும் பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் மட்டும் அனுமதிக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.5500 /2022/எப்1)**

**தீர்மான எண். 411 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**53.** காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.**36**, தற்காலிக தேர்தலுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள்வைக்கும் பாதுகாப்பு வைப்பறையினை (Stong Room) பார்வையிட்டு உரிய கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டிடவும், மேலும் வாக்கு எண்ணும் மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அண்ணா அரங்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டமைப்புகளை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி ஆணையர் தெரிவித்ததின் அடிப்படையில் தேர்தல் அவசியம் கருதியும் அலுவலக நிர்வாக நலன் கருதியும், மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் செய்யும் பொருட்டு ரூ.**1.65** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது.

எனவே அவசர அவசியம் கருதி, மாநகராட்சி பிரிவு **15** ன் கீழ் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.V.புகழேந்தி, என்பவர் மூலம் பணியினை மேற்கொண்டமைக்கும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.6436/2021/எப்1)**

**தீர்மான எண். 412 பதிவு செய்யப்பட்டது.**

**54.** காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் குடியிருப்பில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், கலர்பூச்சு மற்றும் வர்ண பூச்சு, கைப்பிடி சுவர் பழுதுபார்ப்பு, குடிநீர் வசதி கூடுதலாக ஏற்படுத்துதல், மின் வசதி முதலிய பணிக்கு மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**7.50** இலட்சம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் **1920** பகுதி **15** ன் கீழ் நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு.V.புகழேந்தி அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் **பார்வைக்கும் அனுமதிக்கும்.**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 413 அனுமதி அளிக்கப்பட்டது.**

**55.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புராதன நகர மேம்பாட்டு மற்றும் வளர்ச்சி திட்டம் (HRIDAY) ன் கீழ் காமாட்சியம்மன் கோயிலை சுற்றிலும் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.**246.00** இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **31.01.2018** ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தற்போது பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | காமாட்சியம்மன் கோயில் அருகில் பிரசாதம் வழங்கும் அறை, குடிநீர் வசதி, CCTV கட்டுப்பாட்டு அறை மற்றும் உதவி மையம் அமைத்தல். |
| 2 | காமாட்சியம்மன் கோயில் அருகில் காலணி அலமாரி, பொருட்கள் பாதுகாப்பு அறை, கைப்பேசி பாதுகாப்பு அறை பூஜை பொருட்கள் விற்பனை நிலையம் அமைத்தல். |
| 3 | காமாட்சியம்மன் கோயில் சன்னதி தெரு மற்றும் வடக்கு மாட வீதியில் தலா **6** எண்ணிக்கை தானியங்கி தடுப்பு (Automatic rising bollards) அமைத்தல். |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளை ஸ்ரீ காமாட்சியம்மன் தேவஸ்தானம், காஞ்சிபுரம் அவர்களது 15.07.2022 ம் தேதிய கடிதத்தில் கோயில் நிர்வாகத்திற்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடங்களை முழுமையாக பராமரித்துக் கொள்ளும் பொருட்டு ஸ்ரீ காமாட்சியம்மன் தேவஸ்தானம், காஞ்சிபுரம் அவர்களின் 15.07.2022 ம் தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கோயில் நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

புராதன நகர மேம்பாடு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பட்டியலில் கண்டுள்ள இனங்**ளில் வரிசை எண்.2–ல் வருவாய் ஈட்டப்படின் அதன் ஒரு பகுதி மாநகராட்சிக்கு அளிக்கப்படவேண்டும். என்ற நிபந்தனையுடன்** ஸ்ரீ காமாட்சியம்மன் தேவஸ்தான நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.1823/2014/இ1)

**தீர்மான எண். 414 அலுவலக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன் தேவஸ்தான நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.**

**56.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 25.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | திருப்பாற்கடல் – வேகவதி நீருந்து நிலையத்தில் குடிநீரில் கலக்க தேவையான கிருமிநாசினி சோடியம் ஹைப்போ குளோரைட் – திரவ குளோரின் விநியோகம் செய்து இணைந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் திருப்பாற்கடல் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 60 HP வெர்டிகல் டர்பைன் பம்பு செட் யூனிட் III பழுது நீக்கம் செய்து இயக்கி தருதல் பணி | 9.90 | M/s. Sri Raja Ganapathy, Engineering Works, Chennai. | – | 0.66% |
| | | | M/s. Sri Sabari Engineering, Chennai | 1.99% | - |
| 2 | திருப்பாற்கடல் – வேகவதி நீருந்து நிலையத்தில் குடிநீரில் கலக்க தேவையான கிருமிநாசினி சோடியம் ஹைப்போ குளோரைட் – திரவ குளோரின் விநியோகம் செய்து இணைந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3.70 | M/s. Elango Electrical Works, Kancheepuram. | – | 0.16% |
| | | | M/s. E.S. Electricals, kancheepuram. | 0.32% | – |
| 3 | தாயார்குளம் கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள 30HP Non Clog Dry Motor Submersible Pumpset பழுது நீக்கம் செய்து இயக்கி தருதல் பணி | 2.30 | M/s. Elango Electrical Works, Kancheepuram. | – | 0.29% |
| | | | M/s. E.S. Electricals, kancheepuram. | 2.55% | – |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ2)

**தீர்மான எண். 415 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**57.** **காஞ்சிபுரம் நகராட்சி ஓய்வூதியர்கள் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க, இம்மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா அரங்கம் உட்புறம் வாகனம் நிறுத்துமிடத்தின் தெற்கு**

புறத்தில் (6m x 4m அளவில்) மாநகராட்சி பொறியாளரின் குறிப்புப்படி தற்காலிகமாக இடம் ஒதுக்கீடு செய்து தர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி வழங்கலாம் **(ந.க.எண்.6380/2022/எப்3)**

**தீர்மான எண். 416 அனுமதி வழங்கப்பட்டது.**

**58.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் மகிழுந்து வாகனம் (Innova Car) பதிவு எண்.TN21 BB 3093 தற்போது நீதிபதி திரு.P. ஜோதிமணி, தலைவர், மாநில அளவிலான கண்காணிப்பு குழு, தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT–SWM) அவர்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து (General Service) பணிகள் செய்து தரக்கோரி நீதிபதி திரு.P. ஜோதிமணி, தலைவர், மாநில தேசிய பசுமைத் தீர்ப்பாயம், NGT for Solid Waste Management in Tamilnadu அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரி செய்யும் (General Service) பணிகளை நேரடியாக அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Toyota – Lanson Motors Pvt., Ltd., Koyambedu, Chennai என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.35,000/– ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி TN21 BB 3093 மகிழுந்து வாகனத்தின் பழுதுகள் சரிசெய்ய (General Service) மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Toyota – Lanson Motors Pvt., Ltd., Koyambedu, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4275/2022/இ2)

**தீர்மான எண். 417 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**59.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | இராஜாஜி மார்க்கெட் ஓரிக்கை பகுதி தற்காலிக இடமாற்றத்திற்கு கழிவறை மற்றும் பாத்ரூம் அமைக்கவும் அதற்கான குடிநீர் பைப்லைன், மின் வசதி, மின் அறை, செப்டிக் டேங்க், வெதரிங் கோர்ஸ், ஓடு பதித்தல் மற்றும் போர்வெல் மோட்டார் பைப்லைன் முதலியவை அமைக்கவும் பணி | 7.65 | K. RAGUNATHAN | – | 0.03% |
| | | | V. MUGUNTHAN | 0.14% | - |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 418 அனுமதி வழங்கப்பட்டது.**

**60**. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 சின்ன காமராஜர் நகர் பகுதியில் உள்ள கால்வயினை பழுது பார்த்து, Covering Slab may be aroided அமைத்து தருமாறு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். இதன்பேரில் மேற்காணும் பணியினை செய்யும் பொருட்டு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.50 இலட்சத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் செய்ய மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 419 அனுமதி அளிக்கப்பட்டது.**

**61**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்ரீ காமாட்சியம்மன் கோயில் அருகில் வடக்கு மாடவீதி காமாட்சியம்மன் சத்திரம் எதிரில் உள்ள தானியங்கி ஏற்றம் பழுதடைந்து செயல்படாமல் உள்ளது. அதனை சரி செய்து, புதுப்பித்து தருமாறு காமாட்சியம்மன் கோயில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி போக்குவரத்து இடையூறு ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு தானியங்கி ஏற்றும் பழுது ஏற்பட்டுள்ளதை புதுப்பிக்கவும் கூடுதலாக தானியங்கி ஏற்றம் அமைக்க வேண்டி தயார் செய்துள்ள மதிப்பீடு தொகை ரூ.4.50/–இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 420 அனுமதி அளிக்கப்பட்டது.**

**62**. காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.43, பகுதியில் எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு, குடியிருப்பு பகுதிகளுக்குள் தண்ணீர் செல்லா வண்ணம், பொதுமக்கள் நலுனுக்காக மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். எனவே கீழ்கண்ட பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எ ண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சின்னையன் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 7.40 |
| 2 | சதாசிவம் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 6.80 |
| 3 | அதியமான் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 7.80 |
| 4 | வார்டு எண்.43 பகுதிகளில் Pipe Culvert அமைத்தல் | 3.50 |

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 421 அனுமதி அளிக்கப்பட்டது.**

**63.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39, தமிழ்நாடு வீடு வசதி வாரியம் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள பழுதடைந்த கழிப்பிடத்தை அகற்றி புதிய கழிப்பிடம் கட்டுவதற்கும், முன்புறம் உள்ள காலி இடத்தில் Paver Block தரை தளம் அமைத்து தருமாறு தலைமை ஆசிரியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி பணிகளை செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 422 அனுமதி அளிக்கப்பட்டது.**

**64.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் **2020-2021 -15th** நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள காஞ்சிபுரம் நகரமன்ற தீர்மான எண்.**182**, நாள். **30.11.2021** ல் தீர்மானத்தின்படி Tied வகையில் **1** முதல் **12** பணிகளும், Untied வகையில் **1** முதல் **6** பணிகளும் மேற்கொள்ள **22.06.2022** ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தில் தீர்மான எண். **287**, நாள். **30.06.2022** எண்ணிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு Tied வகையில் எடுக்கப்பட்ட **1** முதல் **12** பணிகளில் வரிசை எண்.**9** ல் உள்ள வெங்கடாபுரம் பகுதியில் நுண்ணுரச் செயலாக்க மையம் அமைக்கும் பணிக்கு போதிய இடவசதி இல்லையாதலால், இப்பணியினை திருவீதி பள்ளம் பகுதியில் அதே மதிப்பீட்டு விகிதத்தில் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு மேற்கொள்ள மாமன்றத்தின அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. இப்பணி திட்டப்பணியாதலால் பணியின் அவசியம் இடமாறுதல் செய்து பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 423 அலுவலக குறிப்பின் வரிசை எண்.2-ல் தெரிவித்துள்ளவாறு அனுமதி அளிக்கப்பட்டது.**

**65.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான திருவீதிபள்ளம் பகுதியில் கார், வேன் நிறுத்தும் கட்டணம் வசூல் செய்யும் (வரதராஜ பெருமாள் கோவில் அருகில்) 2022-23 முதல் 2024-25 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 23.08.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்ரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்தார்கள். வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. | குத்தகை | குத்தகை விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து | ஒப்பந்தப்புள்ளியில் |
|---|---|---|---|---|

| எண் | இனம் எண். | | கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | குறிப்பிட்டுள்ள தொகை. |
|---|---|---|---|---|
| 1 | 27 | திருவீதிபள்ளம் பகுதியில் கார் வேன் நிறுத்தும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (வரதராஜ பெருமாள் கோவில் அருகில்) | எ.பாஸ்கரன் எண்.66எ/4, சி.என்.அண்ணாத்துரை தெரு, சின்ன காஞ்சிபுரம். | 6,27,000/- |
| | | | எஸ். செந்தில்குமார், எண்.8எ/11, வேகவதி தெரு, சின்ன காஞ்சிபுரம். | 6,30,000/- |

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.செந்தில்குமார் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.6,30,000/- மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளது. மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** :-

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. இவ்வினத்தின் உரிமைக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பல முறை கோரப்பட்டும் எவரும் முன்வராத நிலையில் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் பணி மேற்கொள்வதால், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இரசீது புத்தகங்கள் அச்சிடும் கூலி அதிகமாக செலவிடுவதால், தற்போது செலவிடுவதை காட்டிலும் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.செந்தில்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை இம்மாநகராட்சி வருவாய் ஈட்டும் பொருட்டு இதனை சிறப்பினமாக கருதி மன்றம் ஏற்று குத்தகை உரிமை வழங்க மன்றம் அனுமதிக்காலம்

**தீர்மான எண். 424 அலலுவக குறிப்பின் வரிசை எண்.2-ல் தெரிவித்துள்ளவாறு அனுமதி அளிக்கப்பட்டது.**

**66**. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, ஒலிமுகமதுபேட்டை பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள கழிப்பிடங்கள், வகுப்பறைகள் ஆகிய அனைத்து பராமரிப்பு பணிகளையும் மற்றும் நடைபாதை கற்கள் அமைத்து தருமாறு பள்ளி தலைமையாசிரியர் மற்றும் மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி பணிகளை செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 425 அனுமதி அளிக்கப்பட்டது.**

**67**. இம்மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்கு 16.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்வறுமாறு:-

1. M/s.No Food Waste, Coimbatore.
2. M/s.AAR GEE AAR Enterprises, Kancheepuram.
3. M/s.Rainbow Solution, Chennai

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் M/s.Rainbow Solution, நிறுவனம் முன் வைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் ஒப்பந்தம் தகுதி பெறவில்லை. மேலும் M/s.No Food Waste, Coimbatore மற்றும்

M/s.AAR GEE AAR Enterprises, Kancheepuram. ஆகிய இரு நிறுவனங்கள் தகுதி பெற்றுள்ள காரணத்தினால் மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்பிக்கப்பட்டு அவர்களின் அனுமதி வழங்கியதின் பேரில் ஒப்பந்ததாரர் M/s.AAR GEE AAR, ENTERPRISES, KANCHEEPURAM & M/s.FOOD WASTE, COIMBATORE தொழில்நுட்ப தகுதிகள் பெற்றுள்ளதால் இருநிறுவனங்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளி **18.08.2022** அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s.FOOD WASTE, COIMBATORE | ரூ. 12.65 / 1 குழந்தைக்கு |
| 2 | M/s.AAR GEE AAR, ENTERPRISES, KANCHEEPURAM | ரூ. 12.50 / 1 குழந்தைக்கு |

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.AAR GEE AAR, ENTERPRISES, KANCHEEPURAM என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இப்பணி அரசின் சிறப்பு திட்ட பணியாகவும் உள்ளதாலும் சிறப்பினமாக கருதி மேற்படி ஒப்பந்ததாரர்களில் M/s.AAR GEE AAR, ENTERPRISES, KANCHEEPURAM, அவர்கள் கொடுத்துள்ள விலை ரூ.**12.50** / **1** குழந்தைக்கு கொடுத்துள்ளதை ஏற்று உத்திரவு வழங்க மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 426 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு உத்திரவு வழங்க மன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.**

**68.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 ல் R.M வரதராஜன் தெரு, வடக்கு மாடவீதி, C.N அண்ணா துரை தெரு மற்றும் திருவேங்கடம் நகர் விரிவு முதலிய பகுதிகளில் புதியதாக குடிநீர் பைப் லைன் அமைக்க மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**8.40** இலட்சத்திற்கு குடிநீர் விநியோகம் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 427 அனுமதி அளிக்கப்பட்டது**

**69.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகளில் முக்கிய சந்திப்பில் உயர்கோபுர மின்விளக்குகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது. தற்போது பூக்கடை சத்திரம் **16** மீட்டர் உயர்கோபுர மின்விளக்கு, பட்டாளத் தெரு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக அருகில் உள்ள **12.5** மீட்டர் உயர்கோபுர மின்விளக்குகள் பழுதாகியும், அதன் ரோப், கியர் பாக்ஸ், கேபிள் மற்றும் கன்ரோல் பாக்ஸ் பழுதாகியுள்ளது. மேலும் உயர்கோபுர மின்விளக்குகளை மேல், கீழ் இயக்குவதில் ஆபத்தான சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை நீக்கம் செய்து, புதுப்பிக்கவும் அதன் பிட்டிங்குகள் LED பிட்டிங்குகளாக மாற்றி புதுப்பித்து ஒளிரவைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.**8.10** இலட்சம் ஆகும்.

தெருவிளக்கின் அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.5812/2022/இ3)**

**தீர்மான எண். 428 அனுமதி அளிக்கப்பட்டது**

**70.** காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகளில் எதிர்வரும் 2022 ம் ஆண்டு வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் கால்வாய் கட்டுதல் மற்றும் சீரமைத்தல் பணி மேற்கொள்ள கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள பணிகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 11 | கச்சியப்பன் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 4.00 |
| 2 | 12 | லிங்கப்பன் பாளையத் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டுகள் அமைத்தல் பணி | 6.00 |
| 3 | 14 | ஆவாகுட்டை பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 3.00 |
| 4 | 16 | ஒக்கப்பிறந்தான் குளம் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 5.40 |
| 5 | 17 | நரசிங்கராயர் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 5.50 |
| 6 | 45 | பாக்கியலஷ்மி நகர் பகுதியில் கல்வெட்டு அமைத்தல் பணி | 5.00 |
| 7 | 47 | ராஜன் நகர் பகுதிக்கு கல்வெட்டு அமைத்தல் பணி | 9.00 |
| 8 | 50 | சர்வோதயா நகர் பகுதிக்கு மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 10.00 |
| 9 | 51 | தேனம்பாக்கம் காலனி பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல் பணி | 8.50 |
| 10 | 18 | மதுராந்ததோட்டம் தெரு மற்றும் P.S. ஸ்ரீநிவாசா உயர்நிலைப் பள்ளி பின் பகுதியில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 15.00 |
| 11 | 21 | அண்ணாசாலைப் பகுதியில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 7.00 |
| 12 | 22 | திருக்காலிமேடு சௌவுராஷ்ட்ரா தெரு, கவரைத் தெரு மற்றும் சாலியர் தெருக்களில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 19.60 |
| 13 | 22 | திருக்காலிமேடு – பாலாஜி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 5.80 |
| 14 | 23 | ஏரிக்கரை கன்னிக் கோயில் தெருவில் RCC கல்வெர்ட் அமைத்தல் பணி | 4.00 |
| 15 | 24 | வரதராஜபுரம் தெரு மற்றும் நியமத்துல்லா நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 9.00 |
| 16 | 25 | திருவீதிபள்ளம் விக்னேஷ் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 18.00 |
| 17 | 27 | ஒத்தவாடை தெருவில் மழைநீர் கால்வாய் கட்டும் பணி | 5.00 |
| 18 | 30 | சி.வி பூந்தோட்டம் தெருவில் RCC கல்வெர்ட் அமைத்தல் பணி | 7.50 |
| 19 | 32 | நாகலூத்து பின் தெருவில் மழை நீர் கால்வாய் கட்டும் பணி | 9.00 |
| 20 | 33 | விளக்கடி கோயில் தெருவில் மழை நீர் கால்வாய் கட்டும் பணி | 24.00 |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 429 அனுமதி அளிக்கப்பட்டது**

**71.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, ல் அமைந்துள்ள அண்ணா பூங்காவில் மராமத்து பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு. அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட பூங்காவின் உட்புறம் புதியதாக குடிநீர் பைப் லைன், மின்வசதிகள், கலர்பூச்சு முதலிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 430 அனுமதி அளிக்கப்பட்டது**

**72.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பொது சுகாதாரப் பிரிவு வாகன பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 18.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN 21 BJ 5393 மினி லாரி (TATA ACE) வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் பணி. | 1.20 | M/S.SK MOTORS CHENNAI | – | 0.01% |
| | | | M/S.A.R.V.BODY BUILDERS CHENNAI | 47.88% | - |
| 2 | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN 21 BJ 5301 மினி லாரி (TATA ACE) வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் பணி. | 1.70 | M/S.SK MOTORS CHENNAI | – | 0.01% |
| | | | M/S.A.R.V.BODY BUILDERS CHENNAI | 30.78% | - |
| 3 | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN 21 BJ 5302 மினி லாரி (TATA ACE) வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் பணி. | 1.20 | M/S.SK MOTORS CHENNAI | – | 0.01% |
| | | | M/S.A.R.V.BODY BUILDERS CHENNAI | 46.22% | - |
| 4 | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN 21 AM 5386 மினி லாரி (TATA ACE) வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் பணி. | 1.20 | M/S.SK MOTORS CHENNAI | – | 0.01% |
| | | | M/S.A.R.V.BODY BUILDERS CHENNAI | 49.74% | - |
| 5 | பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN 21 AM 5371 மினி லாரி (TATA ACE) வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்தல் பணி. | 1.60 | M/S.SK MOTORS CHENNAI | – | 0.01% |
| | | | M/S.A.R.V.BODY BUILDERS CHENNAI | 35.68% | - |

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
2. பணியின் அவசர அவசியம் கருதியும் பொது சுகாதாரப் பிரிவு வாகன பயன்பாட்டின் அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2520/2022/இ2)**

**தீர்மான எண். 431 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**73.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் External Hard Disk வாங்கி வழங்கும் பணி அவசியம் என கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.11,611/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி இரண்டு எண்ணிக்கை அலுவலக கணினிகளில் உள்ள முக்கியமான பதிவுகளை Backup எடுத்து வைத்து பாதுகாக்க வேண்டி External Hard Disk வாங்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|
| | | Syscon Systems, சென்னை | Acute Groups, பாண்டிச்சேரி | Sagar Electronics, சென்னை |
| 1 | External Hard Disk வாங்கி வழங்கும் பணி 1–க்கு விலை | 5805.60 | 6490/– | 6195/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | (GST உட்பட) | | | |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/s Syscon Systems, சென்னை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி ரூ. 5805.60 மற்ற இரண்டு விலைப்புள்ளிகளை விட குறைவாக உள்ளது . மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு** :

1. மதிப்பீட்டு தொகை ரூ. 11611/– க்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s Syscon Systems, சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ2)

**தீர்மான எண். 432 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**74.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் PSK தெரு – HT கழிவுநீரேற்று நிலையத்திற்கு மாநகராட்சியில் உள்ள பத்தொன்பது வார்டுகளில் உள்ள கழிவுநீர் வந்தடைந்து மின்மோட்டார்கள் மூலம் சுத்திகரிப்பு நிலையம் அனுப்பப்படுகின்றது. இங்குள்ள மின்மோட்டார்கள் **2009–ல்** பொருத்தப்பட்டுள்ளது. **18.08.2022** அன்று இயக்கத்தில் இருந்த 75 HP Non Clog Sewerage Submersible motor pumpset –I Over load காரணமாக பழுதாகிவிட்டது. இதன் காயில் சாட் ஆகியுள்ளது. மேலும் தொடர் இயக்கத்தினால் மோட்டார் பம்பு தேய்மானம் அடைந்துள்ளது. எனவே மோட்டார் காயில் புதுப்பித்து, பேரிங்குகள், ஸ்பெசல் டைப் சீல், ‘O’ Rings, Gasket, ஆயில் இவற்றை புதுப்பித்தும் சர்வீஸ் பணிகள் மேற்கொண்டு பொருத்தி இயக்க வேண்டியது அவசியமாகின்றது. இப்பணிகளை மேற்க்கொள்ள உத்தேச செலவீனம் ரூ. **4.10** இலட்சம் ஆகும்.

பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், பணியின் அவசியம் கருதியும் மேற்படி பணிக்கும் , செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.7177/2022/இ2)**

**தீர்மான எண். 433 அனுமதி அளிக்கப்பட்டது.**

**75.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படும் வாகனங்களுக்கு 2022–2023 ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று மற்றும் (FC) புதுப்பித்தல் பணிகளுக்கு அதற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு கீழ்கண்டவாறு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வாகனம் எண் | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| 1. | TN 21 AM 3216 | 3.75 |
| 2. | TN 21 BC 6265 | 2.70 |
| 3. | TN 21 AQ 9594 | 3.00 |
| 4. | TN 21 BC 6244 | 2.35 |
| 5. | TN 21 AM 8082 | 3.70 |
| 6. | TN 21 AM 3292 | 4.50 |
| 7. | TN 21 BC 3727 | 3.70 |

**அலுவலகக் குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பிரிவு வாகனம் பயன்பாட்டினை கருத்தில் கொண்டும், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3497/2022/இ2)

**தீர்மான எண். 434 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**76.** காஞ்சிபுரம் மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் 18.08.2022 அன்று மாவட்ட ஆட்சியர் அரங்கில் நடைபெறுவதையொட்டி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் சிறு குறு தொழில்கள் துறை அமைச்சர்கள், அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் இதர அரசு அலுவலர்கள், இரண்டு மாவட்ட மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகர் மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இக்கூட்டத்திற்கு வருகைப் புரியும் தலைவர்கள், அரசு அலுவலர்களுக்கு காலை உணவும், சிற்றுண்டியும் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வளர்ச்சி பணிகள் கூட்டம் காலை உணவு மற்றும் சிற்றுண்டி விநியோகம் செய்தல். | 65000/- |

**அலுவலகக் குறிப்பு** :-

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.7438/2022/எச்1)

**தீர்மான எண். 435 பதிவு செய்யப்பட்டது.**

**77.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் விநியோகம் பிரிவில் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான வாகனங்களுக்கும் எரிபொருள் பிரதி மாதமும் கடன் முறையில் வழங்கிட தமிழ்நாடு அரசு கூட்டுறவு துறை, காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்., பெட்ரோல் பங்க் மூலம் 01.09.2022 முதல் எரிபொருள் நிரப்ப மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 1001/2022/இ2)

**தீர்மான எண். 436 அனுமதி அளிக்கப்பட்டது.**

**78.** காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.22-க்குட்பட்ட திருக்காலிமேடு பகுதியில் அமைந்துள்ள தாமரைக்குளம் குளக்கரை சுற்றிலும் உள்ள தெருவிளக்கு புதைவழிக்கேபிள்கள் பழுதடைந்தும் அவற்றின் தெருமின் விளக்குகள் பழுதடைந்தும், சிதைவடைந்தும் உள்ளது. எனவே அவற்றின் புதைவழிகேபிள்கள் மற்றும் தெருமின் விளக்குகள் புதுப்பித்து ஒளிரவைக்க வேண்டியுள்ளது. துணை மேயர் அவர்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 2674/2022/இ3)

**தீர்மான எண். 437 அனுமதி அளிக்கப்பட்டது.**

**79.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM) 2022-2023 -ன் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கான கணக்கெடுப்பு, அடையாள அட்டை தயார் செய்தல், சாலையோர வி யாபாரிகளுக்கான வியாபாரத் திட்டம் மற்றும் விரிவாக திட்ட அறிக்கை ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவு தொகை ரூ.27,66,000/- யினை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும்..

**அலுவலக குறிப்பு** :-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று, மேல்நடவடிககை தொடர்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5238/2022/எப்4)

**தீர்மான எண். 438 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**80**. குழந்தைகளுக்கு எதிரான "குற்றங்கள் இல்லா மாவட்டம்" என நமது மாவட்டத்தை முன்னிலைப்படுத்த வேண்டி அரசாணை நிலை எண்.31, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை(ச.ந.5(1)) நாள்.22.09.2020–ல் "மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு ஒன்று ஏற்படுத்திடவும், அக்குழுவின் தலைவர், உறுப்பினர் செயலர் மற்றும் உறுப்பினர்கள் என்கிற அடிப்படையில் செயல்படவும், அதில் மாமன்ற உறுப்பினர்களின் பங்கு குறித்த விவரமும் தெரிவித்து வரப்பெற்றுள்ள அரசாணையினை முதல் கட்டமாக மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.7111/2022/சி2)

**தீர்மான எண். 439 பதிவு செய்யப்பட்டது.**

**81**. காஞ்சிபுரம் மாநகராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 2022–2023 ன் கீழ் காவலன் கேட் முதல் உத்திரமேரூர் காஞ்சிபுரம் சாலை வரை உள்ள சாலையினை தடுப்பு சுவர் அமைத்து தார்சாலை அமைக்கும் பணியினை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் நியமனம் தொடர்பாக 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நிறுவனத்தின் பெயர் M/s | ஒப்பந்த சதவீதம் திட்ட மதிப்பீட்டில் |
|---|---|---|---|
| 1 | காவலன் கேட் முதல் உத்திரமேரூர் காஞ்சிபுரம் சாலை வரை உள்ள சாலையினை தடுப்பு சுவர் அமைத்து தார்சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்குதல் பணி | M/s. Terra Amata Design Consortium, Chennai | 1.70% |
| | | M/s. M.Square Architects, Chennai | 1.95% |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Terra Amata Design Consortium, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 440 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**82**. காஞ்சிபுரம் மாநகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் கடந்த 20/11/2018 முதல் இன்று வரையிலான நாட்களில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற்றுள்ள பணியாளர்கள் (ம) ஆண்டுக்கு ஆண்டு வயது முதிர்வின் காரணமாக பணியாளர்கள் குறைந்து வருவதாலும் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி ந.க.எண் 3001/2017/எச்1 எண்ணிட்ட கடிதத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/S SS Engineer's, Coimbatore நிறுவனத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண் 36/28.06.2019 மற்றும் 27/31.05.2019 மற்றும் 46/30.06.2021 ன் படி தற்போது 350 தூய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகின்றார்கள். வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற்ற பணியாளர்கள் கணக்கில் கொண்டும், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மற்றும் பொதுசுகாதார பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாலும், நிரந்தர தூய்மை பணியாளர்கள் குறைவாக உள்ளதால் தூய்மைப் பணிகள் பாதிக்கும் வண்ணம் உள்ளது. பொதுமக்களின் நலன்கருதியும், பொதுசுகாதார நலன்கருதியும் பொதுமக்களை தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கவும், நகரின் தூய்மையினை மேம்படுத்தவும், தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 பிரிவு 52ன் படியும் தொற்று நோய்கள், 65ன் படியும் அறிவிக்கப்பட்ட கொள்ளை நோய்களிலிருந்து பொதுமக்களை காத்திடவும், ஏதுவாக அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 10.06.2022 ல் வழங்கப்பட்ட பணி உத்திரவு 09.09.2022 அன்றுடன் M/S SS Engineer's, Coimbatore நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு முடிவடையவுள்ளதால் மேலும் 89 நாட்கள் (10.09.2022 முதல் 08.12.2022 வரை) காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும் அதற்குண்டான தோராய ரூ.1.70 கோடி செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3001/2017/எச்1)

**தீர்மான எண். 441 அனுமதி அளிக்கப்பட்டது.**

**மாநகராட்சி அலுவலகம்,** **(ஓம்) மூ. மகாலட்சுமி**
**காஞ்சிபுரம்.** **மேயர்**
**நாள்.26.08.2022** **காஞ்சிபுரம் மாநகராட்சி.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**